மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 275, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

275—

படகுக் குழாம்

***4792 திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, வீராணம் ஏரியில் படகுக் குழாம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, வீராணம் ஏரியில் படகுக் குழாம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். இப்போது அதுபோன்ற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

முற்பகல் 10—25

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மன்னன் பராந்தக சோழன் வீராணம் ஏரியை வெட்டி, விவசாயம் செழிக்க வகை செய்தான். அதற்குப் பின்னாலே, 21 ஆம் நூற்றாண்டில், நேற்றையதினம் 1,465 மில்லியன் கன அடி முழுமையான கொள்ளளவு கொண்ட வீராணம் ஏரியாக உருமாறுவதற்கு, ஏரியை வெட்டித் தூர்வாரும் பணி செய்வதற்காக ரூபாய் 40 கோடியை வாரி வழங்கிய, வாழுகின்ற பராந்தக சோழனாக, மன்னருக்கெல்லாம் மன்னராக, வள்ளலுக்கெல்லாம் வள்ளலாக விளங்குகிற, மாட்சிமைப் பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர்*

2013 ஏப்ரல் 19]

(மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நாட்டு மக்களின் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் என்சார்பாகவும் அவருடைய புனித மலர்ப் பாதங்களுக்கு பணிவான நன்றியை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு சிறப்புகளைக் கொண்ட வீராணம் ஏரி மிகுந்த இயற்கைப் பொலிவோடும், எழிலோடும் விளங்குகிறது. அந்தப் பகுதி மக்கள் பயன்பெறுகிறவகையில், அங்கே ஒரு படகுக் குழாம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் திட்டம் என்றாலே வீணானத் திட்டம் என்ற நிலையை மாற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) அதை வெற்றித் திட்டமாகச் செயல்படுத்திக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னைக்குக் குடிநீர் கொண்டுவர வேண்டும்; அந்தப் பகுதியில் விவசாயம் மேம்பட வேண்டுமென்று வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் அம்மா. குடிநீர் ஆதாரத்திற்குப் பயன்படக்கூடிய அந்த வீராணம் ஏரியில் படகுக் குழாம் அமைப்பதற்கு அனுமதித்தால் தண்ணீர் மாசுபடுவதற்கான வாய்ப்பு இருப்பதால், அந்தத் திட்டம் கைவிடப்படுகிறது. எனவே, இது சாத்தியமல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடியாது, நடக்காது, சாத்தியமில்லை, வாய்ப்பில்லை என்ற எதிர்க்கட்சிகளினுடைய முகத்திரையைக் கிழித்தெறிந்து, முடியாது என்று சொன்ன புதிய வீராணம் திட்டத்தை முடித்துக்காட்டி, சென்னைப் பெருநகர மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்த மாட்சிமைப் பொருந்திய புரட்சித்*

[2013 ஏப்ரல் 19

தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லரசு, கருணை உள்ளத்தோடு, மீண்டும் வீராணம் பகுதி மக்களின் எண்ணத்தை நிறைவேற்றுகின்றவகையில், எதிர்காலத்திலாவது படகுக் குழாம் அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 276, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

276—

கால்நடை மருத்துவமனை

***1762—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, கோட்டப்பூண்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செஞ்சி தொகுதி, கோட்டப்பூண்டி ஊராட்சியிலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கோட்டப்பூண்டி ஊராட்சியிலே அரசின் விதிகளுக்குட்பட்டு, 3,000 கால்நடை அலகுக்குமேல் இருப்பதால், அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.